பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: வைகாசி 3 (16—5—68) வியாழன் ★ வெளியூர்: வைகாசி 4 (17—5—68) வெள்ளி [இதழ்: 278

சென்னை மாவட்டம் விரிவாகும்

சென்னை, மே 16—

சென்னையைச் சுற்றியுள்ள தொழிற்சாலைகள் அடங்கிய இடங்களையெல்லாம் ஒன்று சேர்த்து—தற்போது சென்னை மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், சென்னைப் போலீசுக் கமிஷனருக்கும் உள்ள அதிகார வரம்பை அதிகரிக்கச் செய்வதன்மூலம்—சென்னை மாவட்டத்தை விரிவுபடுத்தத் தமிழக அரசு உத்தேசித்திருப்பதாகத் தெரிகிறது.

செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தைக் காஞ்சிக்கு மாற்றுவது பற்றி அம்மாவட்ட ஆட்சித் தலைவர் அனுப்பியுள்ள யோசனைகளைத் தனியாகப் பரிசிலனை செய்து, அதன்மீது அரசு உத்தரவு பிறப்பிக்கும் என்றும் தெரிகிறது.

டில்லித் திட்டங்கள் சுருங்கும்

மாநிலங்கள் கோரிக்கை குறித்துத் திட்டக் குழு யோசனை

முழுச் செலவையும் ஏற்பதுபற்றி ஆராயப்படுமாம்

புதுடில்லி, மே 16—

"நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மேற்கொள்ளவிருக்கின்ற திட்டங்களைக் குறைத்துக்கொள்ள வேண்டும்" என்று திட்டக் குழு மத்திய அரசுக்கு ஆலோசனை வழங்கியிருப்பதாகத் தெரிகிறது.

'மத்திய அரசுத் திட்டங்களுக்கு ஆகும் செலவினை மத்திய அரசே ஏற்றுக்கொள்ள வேண்டும்' என்ற மாநில அரசுகளின் வற்புறுத்தல் காரணமாகவே மேற்கண்ட யோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

இதுவரையில், மத்திய அரசின் திட்டங்களை நிறைவேற்ற மாநிலங்களுக்கு 50 முதல் 70 சதவிகிதம் நிதியுதவியினை மத்திய அரசு வழங்கியிருக்கிறது; மிஞ்சியுள்ள தொகையினை மாநில அரசுகளே செலவிடுகின்றன.

நாளையும், மறுநாளும் டெல்லியில் நடைபெறவிருக்கின்ற தேசீய வளர்ச்சித் திட்டக் குழுக் கூட்டத்தின்முன் வைக்கப்படவிருக்கும் குறிப்புக்களிலேயே இந்த யோசனை வழங்கப்பட்டிருக்கிறது.

இக்கூட்டம் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றி விவாதிப்பதோடு மாநிலங்கட்கு மத்திய அரசு வழங்கும் நிதி குறித்தும் விவாதிக்கும்.

உத்தரப் பிரதேசமும், பீகாரும், 'மக்கட் தொகை அடிப்படையிலேயே மாநிலங்களுக்கு நிதியுதவி அளிக்க வேண்டும்' என்று கருதுகின்றன; இதனால், 'தொழில்கள் நடைபெறுவதற்கான இடவசதி, மூலப்பொருள் கிடைப்பதுபோன்ற பிரச்சினைகள் இரண்டாவதாகத்தான் கவனிக்கச்பட வேண்டும்' என்பது இதற்குப் பொருளாகும்.

தற்போது 70 சதவிகிதநிதியுதவி மக்கட் தொகை அடிப்படையிலும், மீதியுள்ள 30 சதவிகிதம் அந்தந்த மாநிலங்களிலுள்ள பிற்பட்ட தன்மையை ஒட்டியும் அளிக்கப்படுகின்றன.

காரைக்காலில் தொழிற் பயிற்சிக் கழகம்

ஆகஸ்டில் துவங்கும்

காரைக்கால், மே 16—

காரைக்கால் பகுதியில் ரூ. 15 இலட்சம் செலவில் தொழிற் பயிற்சிக் கழகம் ஏற்படுத்துவதற்குப் புதுவை அரசு அனுமதி தந்துவிட்டது.

ஆகஸ்டுத் திங்களில் துவக்கப்படும் இந்தத் தொழிற் பயிற்சிக் கழகம், முதலில் வாடகைக் கட்டடத்தில் இயங்கும். பின்னர், சொந்தக் கட்டடம் எழுப்பப்படும்.

800 பேர் பலி

பர்மாவில் புயற் சேதம்

ரங்கூன், மே 15—

கடந்த சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் அடித்த புயலின் விளைவாக பர்மாவின் வங்காள விரிகுடாக் கடற்கரைப் பகுதியில் 800-க்கு மேற்பட்டோர் உயிரிழந்திருக்கின்றனர்.

அக்யாப் நகரில் மட்டும் 150 விடுகள் நாசமாயின; 31 கிராமங்கள் அடியோடு அழிந்திருக்கின்றன.

அஞ்சல் கட்டண உயர்வு---- பத்திரிகைகள் எதிர்ப்பு

புதுடில்லி, மே 15—

அஞ்சல் கட்டண உயர்வால் செய்தித் தாள்கள் பாதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக சிறிய செய்தித்தாள்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

இது குறித்து இராஜஸ்தான் சிறிய செய்தித் தாள்களின் ஆசிரியர்கள் அடங்கிய தூதுக் குழு ஒன்று, மத்திய செய்தி—விளம்பரத் துறை அமைச்சர் திரு. கே. கே. ஷாவைச் சந்தித்து, அஞ்சல் கட்டண உயர்வுக்குத் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

உ. பி. மாநிலத்தில் தனி நாடு கோரிக்கை

புதுடில்லி, மே 16—

'உத்தரப் பிரதேசக் கிழக்குப் பகுதிகளில் உள்ள பொருளாதார ஏற்றத்தாழ்வினைப்போக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவில்லை' என்று காரணம் காட்டி, தனி நாடு கோரிப் போராட்டம் நடைபெறும் என்று அறியப்படுகிறது.

'நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் உத்தரப் பிரதேசக் கிழக்குப் பகுதிகளுக்கு அதிகப்படியான நிதியுதவி அளிக்க வேண்டும்' என்று கோரி காங்கிரசுக் கட்சியைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், மனு ஒன்றைத் தலைமையமைச்சர் இந்திரா காந்தியிடம் அளித்துள்ளனர்.

காங்கிரசு ஆளும் மாநிலத்தில் இந்தக் கொடுமை!

பொதுக்கிணற்றில் தண்ணீர் எடுக்கத் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தடை!

மாவட்ட ஆட்சித்தலைவரின் கோரிக்கையும் பயனற்றுவிட்ட விசித்திரம்!

அனந்தப்பூர், மே 16—

அனந்தப்பூர் மாவட்டத்தில் இராமகிரி என்ற கிராமத்தில் குடிநீர்ப் பொதுக் கிணறு, ஒன்று மட்டுமே இருக்கிறது; அங்குள்ள தாழ்த்தப்பட்ட மக்களும் அந்தக் கிணற்றில் தான் தண்ணீர் எடுக்கவேண்டும்.

கிராமத்தின் மொத்த மக்களின் எண்ணிக்கை 2,000; அவ்வளவு பேருக்கும் பயன்பட வேண்டிய அந்தக் கிணற்றில், 'தண்ணீர் எடுக்கக் கூடாது' என்று காங்கிரசு ஆளும் மாநிலத்திலுள்ள இந்தக் கிராமத்தின் தாழ்த்தப்பட்ட மக்கள் தடுக்கப்பட்டிருக்கின்றனர்!

அந்தக் கிணற்றுக்கு அருகில் செல்ல முடியாதபடி தாழ்த்தப்பட்ட மக்கள் தடுக்கப்பட்டிருப்பதால், குடிநீருக்காக அவர்கள் வெகு தொலைவிலுள்ள இடத்திற்குச் சென்று தண்ணீர் எடுத்துக்கொள்ள வேண்டிய அவல நிலை ஏற்பட்டிருக்கிறது!

அனந்தப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர், அண்மையில் இந்தக் கிராமத்திற்குச் சென்று, தாழ்த்தப்பட்ட மக்களின் குறையினைக் கேட்டறிந்தார்.

பின்னர், தாழ்த்தப்பட்ட மக்களிடம் நியாயமாக நடந்துகொள்ளுமாறு கிராமத் தலைவர்களிடம் அவர் கோரிக்கை விடுத்தார்; எனினும், அது பயனளிக்கவில்லை!

பஞ்சாலை நெருக்கடியைத் தீர்ப்பதில் தமிழக அரசு காட்டும் அக்கறை

அமைச்சர்களுடன் அண்ணு அவசர ஆலோசனை

சென்னை, மே 16—

கோவை பஞ்சாலை நெருக்கடி பற்றி முதலமைச்சர் அண்ணு அவர்கள் நேற்று அமைச்சர்கள் இரா. நெடுஞ்செழியன் -- செ. மாதவன் ஆகியோர்களுடன் ஆலோசனை நடத்தினர்; இந்தக் கூட்டத்தில் சம்பந்தப்பட்ட உயர்தர அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

நாளுக்கு நாள் மோசமடைந்துவரும் இந்த நெருக்கடியை விரைவில் தீர்ப்பதற்கு மத்திய அரசினரை என்ன செய்யச் சொல்லலாம் என்பது குறித்தே இந்த ஆலோசனை நடைபெற்றதாகத் தெரியவருகிறது.

இன்று டெல்லிக்குச் செல்லும் முதலமைச்சர் அண்ணு அவர்கள், மத்தியத் தொழிலமைச்சருடன் கலந்துரையாடிய பின், பஞ்சாலைத் தொழிலை எதிர்நோக்கியுள்ள பிரச்சினையில் தீர்வு காண்பதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி அறிக்கை ஒன்று வெளியிடக்கூடும்.

சென்னை நகரில் மஞ்சக் காமாலை நோய்

பொதுமக்கட்கு வேண்டுகோள்

சென்னை, மே 15—

நகரில் கடந்த சில மாதங்களாகவே, மஞ்சக் காமாலை போன்ற தொத்து நோய் பரவியுள்ளது.

நகரின் பல்வேறு மருத்துவமனைகளிலிருந்தும் கிடைத்துள்ள தகவல்களின்படி, நோய் நிதானமாகவே பரவிவருவதாகத் தெரிகிறது.

வட சென்னையில் வண்ணாரப்பேட்டை, கொருக்குப்பேட்டை, கொண்டித்தோப்பு ஆகிய பகுதிகளில்தான் மிகவும் அதிகமாகப் பரவியிருக்கிறது.

இந்த நோய் கண்டவர்களை உடனடியாக மருத்துவமனையில் சேர்க்க வேண்டும் என்றும், யாருக்கேனும் இந்த நோய் ஏற்பட்டால் உடனே தகவல் தெரிவிக்கும்படியும் நகர சுகாதாரத் துறை அதிகாரி பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்கென, தொத்துநோய் மருத்துவமனையில் தனி வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

அண்ணு முயற்சி வெற்றி?

ரூ.10கோடிசெலவில்மின்னணு கருவிகள் தொழிற்சாலை

திருச்சியில் ஏற்படுத்த டில்லி யோசனை

திருச்சி, மே 16—

மின்னணுக் கருவிகள் தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்கான இடங்களில் ஒன்ருகத் திருச்சி, யோசனையில் இருந்துவருவதாகத் தெரிகிறது.

ரூ. 10 கோடி முதலீட்டில் இத்தொழிற்சாலையை ஏற்படுத்த மத்திய அரசு எண்ணியுள்ளதாம்!

இத்தொழிற்சாலையைத் தமிழகத்தில் அமைக்குமாறு பாதுகாப்பு அமைச்சரிடம், முதலமைச்சர் அண்ணு அவர்கள் நேரில் கேட்டுக்கொண்டதாகத் தெரிகிறது.

தொழிற்சாலை ஏற்பட்டால் சுமார் 3,500 ஊழியர்கட்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும்.

பஞ்சாபிலும் குடியரசுத் தலைவர் ஆட்சி

மாநில ஆளுநர் யோசனை

சண்டிகார், மே 16—

"பஞ்சாப் மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி ஏற்படுத்த வேண்டும்" என்று பஞ்சாப் மாநில ஆளுநர் யோசனை தெரிவித்திருப்பதாகத் தெரிகிறது.

ஆளுநர் டாக்டர் பாவேட், மாநிலத்தில் நிலவும் அரசியல் நிலைமைகள் குறித்துத் தமது தனி அறிக்கையைக் குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்தார்.

ஜாகர்த்தா, மே 16—

இந்தோனேசியக் குடியரசுத் தலைவர் சுகார்தோ, இராணுவத்திலும் அரசிலும் செய்யவிருக்கும் தீவிர மாறுதல்களுக்குத் துவக்கமாக ஒரு புதிய போலீசுத் தளபதியை நியமித்துள்ளார்.

முன்பு போலீசுத் தளபதியாக இருந்தவர், ஒருகாலத்தில் சுகர்ணோவின் நெருங்கிய நண்பராயிருந்தவர்.

தமிழகத்திற்குக் கிடைத்த பெருமை இந்தியா முழுமைக்கும் உரியது!

ஒரே திங்களில் உலகப் புகழ் பெற்றார் அண்ணா!

‘இந்தியாவின் தலைமையை அவர் ஏற்க வேண்டும்’ என்ற உணர்வு தோன்றியிருக்கிறது!

வரவேற்பு-பாராட்டு விழாவில் கருத்துரை

சென்னை, மே 16—

உலக நாடுகளுக்குச் சென்று திரும்பிய முதலமைச்சர் அண்ணா அவர்களுக்கு சென்னை—திருவல்லிக்கேணி கடற்கரையில் நடைபெற்ற கூட்டத்தில், அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன், அமைச்சர்கள் இரா. நெடுஞ்செழியன், மு. கருணாநிதி, கே. ஏ. மதியழகன், செ. மாதவன், சாதிக்பாட்சா, மா. முத்துசாமி, பேராசிரியர் க. அன்பழகன் எம்.பி., ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ., அப்துஸ் சமது எம்.பி., ஆகியோர் வரவேற்றும், பாராட்டியும் ஆற்றிய சொற்பொழிவுகளின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது :—

என். வி. நடராசன்

"அண்ணா அவர்களின் சுற்றுப் பயணம் தமிழகத்துக்கு மட்டுமன்றி, இந்தியா முழுமைக்குமே பெருமை அளிக்கிறது.

அவருடைய சுற்றுப் பயணம், இந்திய அரசியல் வரலாற்றிலேயே ஒரு சிறப்பிடத்தைப் பெற்றுவிட்டது.

அவர் ஈட்டியுள்ள புகழ்-பெருமை அனைத்தும் தி. மு. கழகத்துக்கு மட்டும் உரியதன்று; இந்திய மக்கள் அனைவருக்குமே உரித்தான ஒன்றாகும்."

இரா. நெடுஞ்செழியன்

தமிழகத்திலிருந்து அண்ணா அவர்கள் அமெரிக்கா சென்றதனால் தமிழகத்திற்குப் பெருமையையும், புகழையும் பெற்றுத் தந்திருக்கிறார். அந்தப் பெருமை, தமிழகத்திற்கு மட்டுமல்ல—இந்தியாவுக்கே கிடைத்த பெருமையாகவே நாம் கொள்ள வேண்டும்.

‘உலக அரங்கங்களில் இந்தியாவின் புகழையும், பெருமையையும் எடுத்து வைப்பேன்’ என்று அண்ணா அவர்கள் சொல்லிவிட்டுப் புறப்பட்டார்; அதேபோல் வெளிநாடுகளில், தமிழகத்தின் பெருமைகளையும் அருமைகளையும் இதுவரையில் அறியாதவர்களும் அறியும்படிச் செய்துவிட்டு வந்துவிட்டார்!

அறிஞர் அண்ணா அவர்களின் இந்தப் பயணத்தால் தமிழகத்தில் வாழ்கின்ற நாலரை கோடி மக்களின் தரமும் உயர்ந்துள்ளது!

அறிஞர் அண்ணா அவர்கள் நிகழ்த்திய உரையின் மூலம் ரோமாபுரியிலும், பாரிசிலும், அமெரிக்காவிலும், ஜப்பானிலும் தமிழகத்தின் புகழையும் பெருமையையும் உயர்த்திவிட்டு வந்திருக்கிறார்கள்!

கிடைத்த குறுகிய காலத்தில் தமிழகத்தின்—இந்தியாவின் பெருமைகளையும் சிறப்புக்களையும் எடுத்துக் கூறி விளக்கிவிட்டு வந்திருக்கிறார்.

போப் அவர்களிடம் அறிஞர் அண்ணா அவர்கள் தமிழக மக்களின் சிறப்பைப்பற்றிக் கூறிய கருத்துக்களை அங்கிருந்து வெளிவந்த செய்திகள் நமக்குத் தெரிவிக்கின்றன.

"சப்-பெலோஷிப்' என்ற சிறப்பான பட்டத்தை—ஒரு சிலர் மட்டுமே பெறக்கூடிய பட்டத்தை—யேல் பல்கலைக் கழகத்திலிருந்து அண்ணா அவர்கள் பெற்றார்கள் என்றால், அது அவருக்கு மட்டுமல்ல — இந்தியாவிற்கே பெருமையாகும்.

அமெரிக்காவில் மாணவர்கள் பலர் அணி அணியாகச் சென்று அண்ணா அவர்களிடம் கேட்ட கேள்விகளும்—அதற்கு அவர் அளித்த பதில்களும், ‘பாராட்டத்தக்கவை; சிறப்பு மிக்கவை’ என்று அந்த மாணவர்களே விடுத்த அறிக்கை மூலம் நாம் அறிகிறோம்.

மாணவர் குழு விடுத்த அறிக்கையில், ‘அண்ணாவைப்போல் ஓர் அறிஞரை இதுவரை நாங்கள் கண்டதே இல்லை; பழகியதும் இல்லை’ என்று கூறிப்பிட்டிருந்தனர்; இது, நமக்கெல்லாம் பெருமை தரக்கூடியதாகும்."

மு. கருணாநிதி

"அமெரிக்கப் பயணத்தின் மூலம் தென்திசை மக்களின் புகழை நிலைநாட்டிய அண்ணனே! உமது பெருமை தமிழகத்திற்கு மங்காத புகழைத் தருகிறது!

கீழ்த் திசையின் தகர்தகாயம் கண்டு தாமரை மலர்ந்து ஒளி வீசுவதுபோல், தங்களது புகழும் பெருமையும் தமிழகத்தில் ஒளி வீசிக் கொண்டிருக்கிறது!

ஒரு திங்களுக்குமுன் பிரிந்து சென்று பல நாடுகளைக் கண்டு தாங்கள் தமிழகத்தின் புகழைப் பரப்பி வந்துள்ளீர்கள்!

எனவே, தாங்கள் அமெரிக்காவில் கண்டுவந்ததைச் சொல்லுங்கள்! விண்டு வந்ததைக் கூறுங்கள்! கொண்டுவந்த கருத்துக்களைச் சொல்லுங்கள்!"

கே. ஏ. மதியழகன்

"அண்ணா அவர்களை ஓர் எழுத்தாளராக—பேச்சாளராக—முதலமைச்சராகப் பார்த்தோம்; இப்போது அவரை ‘மாபெரும் அரசியல் மேதை’ என்று உலகம் வியப்பதைக் காண்கிறோம்.

அதிகாரமற்ற தூதுவராகச் சென்று, சிறப்பாக இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையை எடுத்துச் சொல்லியிருக்கிறார்! அவரது வெற்றிப் பயணம், தமிழகத்தின் புகழை பன்மடங்கு உயர்த்தியிருக்கிறது

அமெரிக்காவையும், ஜப்பானையும், ரோமாபுரி நாட்டையும், அண்ணா அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கையில், இங்குள்ள பல்லாயிரக்கணக்கான மக்களை அவைகளைப் பற்றி எண்ண வைத்துக்கொண்டே இருந்தார்!

தாங்கள் மட்டுமே அரசியல் கீர்த்தி பெற்றவர்கள் என்று எண்ணிக்கொண்டிருந்த வெள்ளையர்கள், அறிஞர் அண்ணா அவர்களின் அரசியல் அறிவு கண்டு இன்று வியக்கிறார்கள்!

இங்குள்ள மத்திய அரசுக்கும்—மாநில அரசுக்கும் இடையே பிரச்சினைகளில் வேறுபாடுகள் பல இருந்த போதிலும், அண்ணா அவர்கள், கட்டிக்காத்துள்ள பண்பினைப் பாராட்டாதவர்களில்லை!

எர்தத் தூதுவரும் அண்ணா அவர்களைப்போல், இந்த நாட்டின் அரசியல் பண்பினைக் கட்டிக் காப்பதில் துணிவாக ஈடுபடவில்லை!

தமிழகத்தைவிட்டுச் செல்வதற்கு முன்பாக இருந்த சிறப்பைவிட, அண்ணா அவர்கள், உலக நாடுகளுக்குச் சென்று வந்ததற்குப் பின் தமிழகத்தின் சிறப்பு உயர்ந்துள்ளது!

சமதர்ம நாடுகளுக்கு வருகை தருமாறும் அண்ணா அவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக அறிகிறேன். இந்த நாடுகளுக்கெல்லாம் இந்த ஆண்டிலேயே சென்றுவர வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

இந்தியாவில்தான் சனநாயக உணர்வை நிர்மாணிக்க முடியும் அறிஞர் அண்ணா அவர்களின் அனுபவங்களைக் கொண்டு அதனை நாம் உருவாக்க உறுதி ஏற்போம்!"

செ. மாதவன்

"தமிழர் சமுதாயத்தின் சிறப்பை அமெரிக்கா சென்று உயர்த்தி வந்த அறிஞர் அண்ணா அவர்கள், வள்ளுவரது பெருமையையும், குறளின் சிறப்பினையும் அறியச் செய்துவிட்டார்.

குறளின் கருத்தாழமிக்க சிறப்புக்களை உலகிற்கு எடுத்துணர்த்தியதால், வள்ளுவத்தையே உலகினுக்குத் தந்துவிட்ட பெருமை அறிஞர் அண்ணா அவர்களைச் சாரும்!"

மா. முத்துசாமி

"தமிழகத்தின் நடமாடும் பல்கலைக் கழகம் அறிஞர் அண்ணா அவர்கள் மேலை நாடுகளுக்கெல்லாம் சென்று, தமிழகத்தின் பெருமைகளை எடுத்தியம்பிவிட்டு வந்துள்ளார்கள்.

அண்ணா அவர்களை நாம் வழியனுப்பிவைத்தபோது, ‘யேல் பல்கலைக் கழகத்திற்கு அண்ணா அவர்கள் செல்வதனால் தமிழகத்தின் பெருமைகள் உயரும்’ என்று சொன்னோம்; ஆனால், அறிஞர் அண்ணா அவர்கள் யேல் பல்கலைக் கழகம் சென்றதனால், யேல் பல்கலைக் கழகத்தின் மதிப்பு உயர்ந்தது!

தமிழகத்தின் மாண்பினை நிலைநாட்டிப் புகழ் ஓங்கச் செய்த அறிஞர் அண்ணா அவர்களைத் தமிழகத்தின் உள்ளாட்சித் துறைகளில் பணியாற்றும் பல இலட்சக்கணக்கான அலுவலர்கள் சார்பிலும், ஆசிரியர்கள் சார்பிலும் வரவேற்கிறேன்."

எஸ்.ஜே. சாதிக் பாட்சா

"தமிழ்நாட்டின் பெருமைகளையும் சிறப்புக்களையும் உலக நாடுகளுக்கு உணர்த்திவிட்டு அறிஞர் அண்ணா அவர்கள் தமிழகத்திற்குத் திரும்பியிருக்கிறார்கள்.

இன்று தமிழகத்தில் உள்ள பல பிரச்சினைகளையும் தீர்த்து வைக்கின்ற தலைவராக—தமிழக மக்களுக்கு ஒரு வழிகாட்டியாக அறிஞர் அண்ணா அவர்கள் இருக்கின்றார்கள்.

அண்ணா அவர்கள் தமிழ்நாட்டிற்கு மட்டுமன்றி இந்தியத் துணைக் கண்டத்திற்கே ஓர் வழிகாட்டியாகிவிட்டார்!"

க. அன்பழகன்

"அறிஞர் அண்ணா அவர்களின் உலகச் சுற்றுப் பயணம் வெற்றியடைந்தது குறித்துத் தி. மு. கழகத்தினர் மட்டுமல்ல—சனநாயகத்தில் நம்பிக்கையுள்ள அனைவருமே மகிழ்ச்சியடைகிறார்கள்.

அண்ணா அவர்கள் வெளி நாட்டில் இருந்தபோது வெளியிட்ட கருத்துக்களைத் தமிழக ஏடுகள் மட்டுமல்ல—வட இந்திய ஏடுகளும் விரிவான முறையில் வெளியிட்டன!

வட இந்தியாவிலும் அண்ணாவின் கருத்துக்களைப் பாராட்டுவோர் பெருகி வருகின்றனர்!

40 ஆண்டுக் காலத் தொண்டின் மூலம் தமிழக அரசியலில் இடம் பெற்றார் அண்ணா!

நான்கு ஆண்டு காலத் தொடர்பின்மூலம் அகில இந்தியாவில் புகழ் பெற்றார்!

இந்த ஒரே திங்களில் உலகப் புகழ் பெற்றார் அண்ணா!

இந்தியாவிற்கு அவரது தலைமை கிடைக்க வேண்டும் என்ற உணர்வு வட இந்தியாவில் பெருகி வருகிறது!

இவரைப் போன்ற பண்பும், அறிவாற்றலும், சனநாயகத்தில் ஆழ்ந்த பற்றும் உள்ளவர்கள் இந்தியாவில் மிக அருமையாதலால், ‘இந்தியாவின் தலைமையை அவர் ஏற்கவேண்டும்’ என்ற உணர்வைத் தோற்றுவித்திருக்கிறது!

யேல் பல்கலைக் கழகத்திலும் பிற இடங்களிலும் இந்திய அரசியல் பற்றி அவர் தெரிவித்த கருத்துக்களை, டில்லி வட்டாரத்தினர், ‘எவ்வளவு பெருந்தன்மை மிக்கது’ என்று வாயார—மனமாரப் பாராட்டியுள்ளனர்."

ம. பொ. சிவஞானம்

"முதலமைச்சர் அண்ணா வெளிநாடுகளுக்குச் செல்வதற்குமுன்னும் பலர் வெளிநாடு சென்றிருக்கிறார்கள்; இனியும் பலர் செல்ல இருப்பார்கள்; இருந்தாலும் இடையே அண்ணாவின் வெளிநாட்டுப் பயணம் ஒரு தனி மதிப்பைப் பெற்றுவிட்டது.

‘தமிழர்’ என்ற சிறப்புடனும், ‘இந்தியர்’ என்ற சிறப்புடனும், ‘எதிர்க் கட்சித் தலைவர்’ என்ற சிறப்புடனும், ‘ஓர் ஆட்சியின் தலைவர்’ என்ற சிறப்புடனும், ‘ஓர் ஆட்சியை அழித்தவர்’ என்ற சிறப்புடனும், ‘ஓர் ஆட்சியை அமைத்தவர்’ என்ற சிறப்புடனும் வெளிநாடுகளுக்குச் சென்று வந்திருக்கிறார். இத்தகைய சிறப்புடன் இதுவரை யாரும் சென்றதில்லை—இனியும் செல்லப்போவதில்லை! இதனை நான் காழ்ப்பால் சொல்லவில்லை — தமிழின் சிறப்பால் சொல்கிறேன்.

அண்ணாவை நான் புகழ்ந்தால் அதற்குக் காரணம் சொல்லுவார்கள்! அண்ணாவின் தம்பிமார்கள் புகழ்ந்தால், அதற்கும் காரணம் சொல்லுவார்கள். இப்போது அமெரிக்கா புகழ்ந்திருக்கிறது; இதற்குக் காரணம் என்ன? அமெரிக்க ஆட்சி — மக்கள் — பல்கலைக் கழக மாணவர்கள் வரவேற்றிருக்கிறார்கள்; இதற்குக் காரணம் என்ன என்று சிந்திக்க வேண்டும்.

சனநாயகத்திற்கு இந்தியாவை அமெரிக்கா நம்பியிருக்கிறது!

ஆசியாவில் சனநாயகத்தின் நிலைக்களமாக இந்தியா இருக்கிறது!

இந்தியாவில் சனநாயகம் செத்தால் ஆசியாவில் சனநாயகம் நிலைக்காது என்று உணர்ந்திருக்கிறார்கள்.

அதனால், ‘ஆளும் கட்சியும் மாறி மாறி வரவேண்டும்’ என விரும்புகிறார்கள்!

கதம்பக் கட்சி ஆட்சி வருவதைவிட ஒரே கட்சி வருவதன் நன்மையைப்பற்றி நன்கு புரிந்துகொண்டிருக்கிறார்கள்!

(3-ம் பக்கம் பார்க்க)

வருக! வருகவே!

சென்னை-திருவல்லிக்கேணி கடற்கரையில் நடைபெற்ற கூட்டத்தில் அறிஞர் அண்ணா அவர்களை வரவேற்று--பாராட்டி

உள்ளாட்சித் துறை அமைச்சர்

மா. முத்துசாமி

அவர்கள் பாடிய கவிதை

★

எங்கள் அண்ணனே! தேன்தமிழ் மன்னனே!
மங்காப் புகழே! வருக! வருகவே!

தங்கள் ஒளிமுகம் புன்னகைத் திருமுகம்
எங்கள் உலகம்! என்றே ஏங்கி

தாய்முகம் காணுச் சேய்போன்ற எம்முனே
தலைவா, வந்தனை; வருக, வருகவே!

உலகோர் காஞ்சி எங்கே என்று
அலைவார் இனிமேல்! உயிரே வருகவே!

வையம் தன்னை அன்பினால் வென்ற
மன்னா! அண்ணா! வருக வருகவே!

இல்லார் இருப்பார் எவரும் போற்றும்
வல்ல நல்லோய், குறளே! வருகவே!

தமிழ்மொழி மாண்பைத் தரணி அருந்த
அமுதாய்ச் சென்ற அண்ணலே வருகவே!

பொதிகைத் தென்றல் போற்குளிர் மனமுடை
மதிமிகு அறிஞ பெரியோய் வருகவே!

நதிகள் இணைந்து ஒன்றாய் வந்து
நிதியே தங்களை வருக வருகென

வாழ்த்தும் ஒலியுடன் தம்பியர் எங்கள்
வாழ்த்தும் கலந்தது கேளீர் வருகவே!

தொழிலாளர் பிரச்சினை

பல்வேறு குழுக்கள் அளித்த அறிக்கை வெளியிடப்படும்

புதுடில்லி, மே 16—

தொழிலாளர் பிரச்சினைகள்பற்றிப் பல்வேறு குழுக்கள் ஆராய்ந்து அளித்துள்ள விவர அறிக்கையை வெளியிட தேசியத் தொழிலாளர் குழு முடிவு செய்திருக்கிறது.

இப்பிரச்சினைகளை ஆராய 38 வல்லுநர் குழுக்களை இக்குழு நியமித்தது.

சில குழுக்கள் தங்களுடைய அறிக்கைகளை, தேசியத் தொழிலாளர் குழுவுச்கு அனுப்பிவிட்டன என்றும் தெரியவருகிறது.

அண்ணா காட்டிய பாதையில் செல்ல முயலுகிறார் மொரார்ஜி

புதுடில்லி, மே 15—

"குடிப் பழக்கத்தைச் சட்டபூர்வமாகத் தடை செய்ய வேண்டும் என்பதை வற்புறுத்த ஓர் அறப்போர் இயக்கம் துவக்கப்பட வேண்டுமென்ற யோசனையை நான் முழுமனத்துடன் ஆதரிக்கிறேன்.

"காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்தவர்களே மது அருந்துவது வேதனையாக இருக்கிறது"

என்று, துணைத் தலைமையமைச்சர் மொரார்ஜி தேசாய் கூறியிருக்கிறார்.

தென்-வட ஆற்காடு மாவட்டங்களில் உள்ள கனிவளங்கள்

தமிழகத்தின் முன்னேற்றத்திற்கு நம்பிக்கையூட்டும் நற்செய்தி

சென்னை, மே 16

"வட ஆற்காடு, தென் ஆற்காடு, சேலம் ஆகிய மாவட்டங்களில் உலோகச் சத்துக்களைத் தோண்டியெடுப்பதன்மூலம், தமிழகத்தின் இயற்கையான முன்னேற்றத்திற்கு வழி பிறக்கும் என நம்புகிறேன்"

என்று, தொழில் அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

வட ஆற்காடு, தென் ஆற்காடு, சேலம் முதலிய மாவட்டங்களில் கதிரியக்கம உள்ள தாதுப் பொருள்கள் இருப்பதாக ஐ. நா. ஆதரவில் விமானத்திலிருந்து பூகோள பௌதிக ஆய்வு நடத்தியதில் தெரியவந்திருக்கிறது.

வட ஆற்காடு மாவட்டத்தில் திருப்பத்தூருக்குத் தெற்கே சில மைல் தூரத்தில் கரிச் சத்துக்கள் இருப்பதாக விமானத்திலிருந்து புவியியல் ஆய்வு செய்ததில் தெரியவந்திருக்கிறது. அத்துடன், அணுசக்தி உற்பத்தி செம்வதற்குப் பயன்படும் கதிரியக்கம் உள்ள அபூர்வ உரேனியம் இருப்பதாகவும் தெரியவந்திருக்கிறது.

ஆய்வு செய்த விமானத்தில் இருந்து நுண் கருவிகள்மூலம் கதிரியக்கம் உள்ள உரேனியம் இருப்பதாகத் தெரியவந்திருக்கிறது; எனினும், புள்ளிவிவரங்களை அலசிப் பார்க்கும்வரையில் எதுவும் நிச்சயமாகச் சொல்லமுடியாது.

14,100 சதுர கிலோமீட்டர் பரப்பில் காந்த சக்தியுள்ள இரும்பு, செம்பு, ஈயம், துத்தநாகம், பஸ்பேட்டு முதலியவை இருப்பதாகத் தெரியவந்திருக்கிறது; ஆனால் கதிரியக்கம் உள்ள உரேனியம் இருப்பது இப்போது புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

மூன்றுண்டுகளாக ஆய்வு நடைபெற்றதன் பயனாக மேற்கூறிய உலோகங்களைக் கண்டுபிடிப்பதற்குத் தோண்டிப் பார்க்க வேண்டிய இடங்கள் தீர்மானிக்கப்படும்.

பிரிட்டனின் புவியியல் ஆராய்ச்சி நிறுவனம் ஒன்றைச் சேர்ந்த காப்டன் பார்ட்டன் என்பவரே படம் எடுத்து பூகோள பௌதிக ஆராய்ச்சி நடத்தியும் வருகிறார்.

பிரிட்டிஷ் நிறுவனம் ஏற்கனவே ஒரு டகோடா விமானத்திலிருந்து புகைப்பட ஆய்வு எடுத்துவிட்டது.

வேலையில் முக்கால் பங்கிற்கு அதிகமாக முடிந்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

பூமிக்கு அடியில் உள்ள தாதுப் பொருள்களை அறிந்துகொள்வதற்கு உதவக்கூடிய நுட்பமான கருவிகள் டகோடா விமானத்தில் இணைக்கப்பட்டிருக்கின்றன.

காந்த சக்தியுள்ள கருவியும் கதிர்களை செலுத்திக் தகவல் அறியக் கூடிய கருவிகளும் விமானத்தில் இணைக்கப்படடிருக்கின்றன.

இந்தக் கருவிகளின் உதவியைக் கொண்டு பூமிக்கு அடியில் 6,000 அடி ஆழத்தில் உள்ள தாதுப் பொருள்களை அறிந்துகொள்ள முடியுமாம்.

இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு 14 இலட்சம் டாலர் செலவாகும் இதில் 67 சதவிகித பங்கை ஐ. நா. ஏற்றுக்கொள்ளும்; 33 சதவிகித பங்கை தமிழக அரசு ஏற்றுக்கொள்ளும்.

சனநாயகம் வெற்றிபெற..!

மக்களவைத் தலைவர் யோசனை ஒன்று கூறுகிறார்

ஐதராபாத், மே 15—

"சனநாயக அமைப்பு திறம்பட இயங்கவேண்டுமானால், நாட்டில் மூன்று கட்சிகளுக்கு மேல் இருக்கக்கூடாது"

என்று இங்கு சமுதாய நல மண்டடம் ஒன்றைத் திறந்து வைத்துப் பேசுகையில் நாடாளுமன்ற மக்களவைத் தலைவர் திரு. சஞ்சீவ ரெட்டி குறிப்பிட்டுள்ளார்.

"'கைத் தொழில்களெல்லாம் அரசுடைமைகளாக்கப்பட வேண்டும்' என்று கோரும் இடதுசாரிக் கட்சியாகவும்—தனியார் முயற்சியை ஆதரிக்கும் வலதுசாரிக் கட்சியாகவும்—கலப்படப் பொருளாதாரத்தை ஆதரிக்கும் கட்சியாகவும்—இப்படிப்பட்ட கொள்கைகளைக் கொண்டதாக இந்த மூன்று கட்சிகளும் நாட்டில் இருக்குமானால், சனநாயக முறை வெற்றிபெறும்.''

தமிழகத்திற்குக் கிடைத்த...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழகத்தில் நிரந்தர ஆட்சி அமைந்து மற்ற மாநிலங்கட்கு அது வழிகாட்டியாக இருக்கிறது!

20 ஆண்டுகளுக்குப் பிறகு சனநாயகம் புத்துயிர் பெற்றிருக்கிறது!

அந்த சனநாயகத்திற்கு வாழ்வு கொடுத்த தலைவரை வரவேற்கிறார்கள்.

ஒரு தனிப்பட்ட அண்ணாவை வரவேற்கவில்லை—4 கோடி தமிழர்களை வரவேற்றிருக்கிறார்கள்!

அண்ணாவின் இந்தப் பயணத்தினால் ஏற்பட்ட பலன், போகப் போகத்தான் தெரியும்!

ஜப்பான் நாட்டுக்குச் சென்ற அவர், சேலம் இரும்பாலை ஏற்பட வழிவகுத்து வந்துள்ளார். இது, தமிழ்நாட்டின் தொழில் வளம் மட்டுமல்ல — இந்தியாவின் தொழில் வளமே பெருகுவதற்கு வழிவகுப்பதாகும்.

'நாட்டின் பொருளாதார — தொழில் வளர்ச்சிக்கு ஒரு மாநிலத் தலைவரும் வழிகாட்ட இயலும்' என்பதை அண்ணா அவர்கள் மெய்ப்பித்திருக்கிறார்!

'தமிழன்' என்ற எண்ணத்தோடு சென்ற முதல் தமிழன்—'இந்தியன்' என்ற எண்ணத்தோடு சென்ற முதல் இந்தியன்—அண்ணா அவர்கள்தான்! மற்ற பலர், பிறக்கும்போதே 'தமிழன்' என்ற உணர்வைப் பெருதவர்கள்!

அண்ணா அவர்கள் எந்த இடத்திலும் தமிழனாக—இந்தியனாக நடந்தார்!

இந்தியத் தேசிய கௌரவத்தை—சுயமரியாதையைக் கட்டிக்காப்பதில் காங்கிரசுக்காரர்கள்கூட இவ்வளவு தெளிவாக நடந்திருப்பார்களா எனச் சந்தேகப்படுகிறேன்.

'வெளிநாடுகளுக்குச் செல்லும் அண்ணா அவர்கள், அங்கு ஏமாந்துவிடுவாரோ' என்று பலர் எண்ணினர்; அவரா ஏமாறுபவர்?

கேட்கப்பட்ட ஒவ்வொரு கேள்விக்கும் வெகு சாமர்த்தியமாக அல்லவா அவர் பதிலளித்திருக்கிறார்! அவரிடம் இலேசாகப் பதில் பெற முடியாது என்பதை அங்கு உள்ளவர்கள் தெரிந்துகொண்டனர்.

அண்ணாவின் சுற்றுலா எல்லா வகையிலும் வெற்றி; ஆனால் ஒரு தோல்வி; அது, 'அண்ணா அவர்கள், வெளிநாடுகளில் எதையாவது சொல்லி அகப்பட்டுக்கொள்ள மாட்டாரா' என்று எதிர்பார்த்தவர்களுக்கு ஏற்பட்ட தோல்விதான்!"

'ஏன் போகிறோம்' என்பது தெரியாமலேயே—'எதை எப்படி அணுகுவது' என்பதைத் தெளிந்து புரிந்துகொள்ள முடியாமலேயே எத்தனையோ பேர் இந்த நாட்டின் தூதுவர்களாகச் சென்றுள்ளனர்; ஆனால் அறிஞர் அண்ணா அவர்கள், அவர்களினின்றும் தனித்து விளங்கினார்!

அண்ணா அவர்கள், அமெரிக்காவைக் கண்டுவந்தவரல்லர்—அமெரிக்காவில் தமிழகத்தைக் காண்பித்து வந்தவராவார்!"

மணிக்கு 120 கி.மீ. வேகத்தில் ஓடும் இரயில் வண்டி

டில்லி -- கல்கத்தா பாதையில் விடப்படும்

சென்னை -- பம்பாய்க்கும் விடுவதற்குத் திட்டம்

புதுடில்லி, மே 16—

இவ்வாண்டு காந்தி பிறந்த நாள் (அக்டோபர் 2) இந்திய இரயில்வேக்களின் 'மிகு விரைவு' வண்டிப் போக்குவரத்தின் துவக்க நாளாக அமையும்.

இரயில்வேயின் மிகு விரைவு வண்டிகள் விடும் திட்டத்தின் முதல்படியாக, புதுடில்லியுடன் கல்கத்தா—பம்பாய் — சென்னை ஆகிய நகரங்கள் இணைக்கப்படும்.

முதல் மிகு விரைவு வண்டி டில்லிக்கும் — கல்கத்தாவுக்குமிடையே அக்டோபர் 2-ஆம் நாள் விடப்படும்; அது. மணிக்கு 125 கிலோ மீட்டர் வேகத்தில் செல்லும். இடையில் கான்பூரிலும், முகல்சராயிலும் தான் அது நிற்கும். மொத்தம் 17¼ மணி நேரத்தில் பயணம் முடிவடையும்.

இதே போன்ற மிகு விரைவு இரயில் வண்டி டில்லிக்கும்—ஏனைய மாநகரங்களான பம்பாய், சென்னை ஆகிய நகரங்களுக்குமிடையே 1969-ம் ஆண்டு இறுதியில் விடப்படும்.

மிகு விரைவு வண்டி விடும் திட்டத்தின் இரண்டாவதுபடியாக, மணிக்கு 100 கிலோமீட்டர் வேகத்தில் செல்லக்கூடிய வண்டிகள் ஏனைய முக்கிய வழிகளில் விடப்படும்.

டில்லி—கல்கத்தா பாதையில், இதற்கென நடத்தப்பட்ட சோதனை வெற்றிகரமாக முடிவடைந்திருக்கிறது.

மேலும், பல பாதைகளிலும், மிகு விரைவு வண்டிகளைவிடுப் பரீட்சிக்கும் திட்டம் ஆய்வி[illegible] உள்ளது.

திண்டிவனம் நகர தி. மு. க. தோழர்கட்கு:

"நடைபெறவிருக்கும் நகரக் கழகத் தேர்தல் சம்பந்தமாகவும், சார்பு மன்றங்கள், தொழிற் சங்கச் செயலாளர்கள், கழக உறுப்பினர்கள் ஆகியோர் உறுப்பினர் சீட்டு சம்பந்தமாகவும் நகரக் கழகப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள என்னிடம் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்"

என்று, திண்டிவனம் நகர தி.மு.க. செயலாளர் எஸ். பக்கிரி அறிவிக்கிறார்.

அப்துஸ் சமது

"இந்தியத் துணைக்கண்டத்தின் தூதுவராகச் சென்று, 'இந்தியாவின் புகழை இமயம்போல் உயர்த்தியவர் அண்ணா அவர்களாவார்' என்பதை, இதயமுள்ள எவரும் ஒப்புக்கொள்வர்!

இதற்கு முன்பு எவ்வளவோ பேர் இந்திய நாட்டின் தூதுவர்களாக அல்லது தூதுக் குழுவின் ஓர் அங்கமாகச் சென்றிருக்கிறார்கள்; ஆனால், அண்ணாவைப் போன்று அவர்கள், இந்திய நாட்டின் தூதுவர்களாகப் பணியாற்றினரா என்பது, கேள்விக்குரிய ஒன்றாகும்.

செங்கற்பட்டு குடிநீர்ப் பிரச்சினை

நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் உறுதிமொழி

சென்னை, மே 15—

தமிழகப் பொது நலத்துறை அமைச்சர் திரு. சாதிக்பாட்சா அவர்களுக்கு நேற்று மாலை செங்கற்பட்டு நகரமன்றத்தின் சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

வரவேற்பு இதழில் நகரிலுள்ள குடிநீர்ப் பிரச்சினைப்பற்றி குறிப்பிடப்பட்டிருந்தது.

வரவேற்பிற்குப் பதிலளிக்கையில் அமைச்சர் சாதிக் பாட்சா அவர்கள், நகரிலுள்ள தண்ணீர் பிரச்சினை குறித்தும், சுகாதார வசதிகள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ள குறைகளைப் போக்குவதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

பின்னர் நகரின் வேறொரு இடத்தில் நடத்தப்பட்ட குடும்ப நலத் திட்ட விழாவில் அமைச்சர் கலந்துகொண்டு குடும்ப நலத்திட்ட நிலையத்தைத் திறந்துவைத்தார்.

அங்கு நடைபெற்ற கூட்டத்தில் குடும்ப நலத் திட்டம் பற்றியும், அத்திட்டத்தினால் நாட்டுக்கு ஏற்படும் நலன்கள் குறித்தும் அமைச்சர், விளக்கமாகவும் விரிவாகவும் பேசினார்.

நகர மன்றத் தலைவர் திரு. பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்களான திரு. விசுவநாதன், கொளத்தூர் கோதண்டம், செயலாளர் அன்சர், வழக்கறிஞர் பி. என். கிருஷ்ணன் ஆகியோர் பேசினர்.

கூட்டத்திற்குப் பின்னர் குடும்ப நலத்திட்டம் பற்றிய கதாகாலட்சேபமும், சழகப் பொதுக்குழு உறுப்பினர் திரு. ஜார்ஜ் அவர்கள் எழுதிய குடும்ப நலத் திட்டப் பிரச்சார நாடகமும் நடைபெற்றன.

நகராட்சிமன்ற வரவேற்பில் கலந்துகொள்ள செங்கற்பட்டுக்கு வருகை தந்த அமைச்சர் சாதிக் பாட்சா அவர்களுக்கு, தி. மு. க. சார்பிலும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

அஞ்சல் கட்டண உயர்வின் எதிரொலி!

சிறிய பத்திரிகைகளுக்குச் சலுகை அளிக்காவிடில் ஏற்படும் விளைவு

புதுடில்லி, மே 15—

இராஜஸ்தான் மாநிலத்தில் நடைபெற்ற பத்திரிகை ஆசிரியர்கள் மாநாட்டின் சார்பில் அனுப்பப்பட்ட ஏழு உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்று, துணைத் தலைமையமைச்சர் மொரார்ஜி தேசாய் வீட்டின் முன்பு அமர்ந்துகொண்டுவிட்டனர்.

இன்றுமுதல் விலை ஏற்றப்பட்டிருக்கும் அஞ்சல் கட்டண உத்தரவுகளைத் திரும்பப் பெற வேண்டுமென்பதை வற்புறுத்தும் வகையில் இவர்கள், மேற்சொன்ன முறையில் எதிர்ப்புத் தெரிவித்திருக்கின்றனர்.

அஞ்சல் கட்டண உயர்வால் நாட்டில் உள்ள 300-க்கும் மேற்பட்ட நாளிதழ்கள்—கிழமை இதழ்கள் பாதிக்கப்படும் என்று தெரிகிறது.

சிறிய பத்திரிகைகட்கும் தேவையான சலுகையை அரசு அளிக்காவிடில் 80 சதவிகிதப் பத்திரிகைகள் நிறுத்தப்பட்டுவிடும் என்றும் அறிவிப்படுகிறது.

கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு!

தமிழக முதல் அமைச்சர் அண்ணா அவர்களை அமெரிக்கா அழைத்து, பிற நாட்டில் உள்ளவர்கள் இதுவரை அடையாத 'யேல் பல்கலைக் கழகச் சிறப்புப் பட்டத்தை' வழங்கியுள்ளது. இதுபோல் ஏனைய நாடுகளும், அண்ணா அவர்களைப் பெருமைப்படுத்தப்போகின்றன. அவர் திறமையை உலகம் போற்றவும் செய்கிறது.

காலஞ்சென்ற இந்தியப் பிரதமர் நேருவுக்குப் பின், 'தென் இந்தியாவின் தலைசிறந்த தலைவர்' என உலக நாடுகள் ஒருங்கிணைந்து கூறுகின்றன.

உலகில் தலைசிறந்த நாடாகிய ஜப்பானுக்கும் அண்ணா சென்று பல தொழில் நிலையங்களைக் கண்டுள்ளார்.

நமது நாடு ஏனைய நாடுகளுடன் தொழில் வளம் பெற்று உலகில் சிறந்து விளங்க இந்திய நாட்டையும் -- சிறப்பாகத் தமிழகத்தையும் தொழில் மயமாக்கிச் சிறப்படையச் செய்ய வேண்டுகிறோம்.

அண்ணாவின் குரல் உலகம் எங்கும் பரவட்டும்!

ஏ. ஆர். இராமசாமி, உரிமையாளர்

ஏ. ஆர். ஆர். சீவல் பாக்டரி,

கும்பகோணம்

பிச்சைக்காரர்கள் தொல்லையை ஒழிக்க என்ன செய்வது?

மாநில அரசுகளுடன் மத்திய அரசு விவாதிக்கும்

கல்கத்தா, மே 16—

பிச்சைக்காரர்களின் தொல்லைகளை ஒழிப்பது பற்றி என்ன செய்யலாம் என்பதுபற்றி மாநில அரசுகளுடன் விவாதிக்க ஜூலை அல்லது ஆகஸ்டு திங்களில் மாநாடு ஒன்றினைக் கூட்ட மத்திய அரசு உத்தேசித்திருக்கிறது.

இப்பிரச்சினையை எப்படித் தீர்ப்பது என்பதுபற்றிய யோசனைகளை வழங்கவேண்டும் என்று மாநில அரசுகளை மத்திய அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது.

நன்றியறிவிப்பு

“10-5-68-ல் நடைபெற்ற தென்னுற்காடு மாவட்ட மேலவை இடைத் தேர்தலில் திரு. இரா. சாம்பசிவம் எம்.எல்.சி. அவர்களுக்குப் பெருவாரியாக வாக்களித்து கழகத்திற்கு வெற்றி தேடித் தந்த ஊராட்சிமன்றத் தலைவர்களுக்கும், ஆதரவு திரட்டுவதற்கு உழைத்த நண்பர்களுக்கும்--கழகத் தோழர்களுக்கும் எங்கள் மனமுவந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்”

என வழக்கறிஞர் டி.ஏ.எஸ்.பாலன் எம்.சி., திண்டிவனம் நகரச் செயலாளர் எஸ். பக்கிரி ஆகியோர் அறிவிக்கின்றனர்.

‘தேச பக்தி’--தனிப்பட்டவர் ஏகபோக சொத்து அன்று’

‘அதன் பொருளை அண்ணாதுரை விளக்கியிருக்கிறார்’

‘வெளிநாடுகளில் இராசதந்திர முறைப்படி அவர் நடந்துகொண்டிருப்பது நல்ல பலனைத் தந்திருக்கிறது’

முதலமைச்சர் அண்ணா அவர்கள் வெளிநாடுகளில் கடைபிடித்த இராசதந்திர முறைகளைச் சிறப்பித்துப் பாராட்டி, ‘இந்தியன் எக்ஸ்பிரஸ்’ (15—5—68) இதழ், நல்லதோர் எடுத்துக்காட்டு என்ற தலைப்பில் எழுதியுள்ள தலையங்கத்தின் ஒரு பகுதி இங்கு தரப்பட்டிருக்கிறது:—

“வெளிநாடுகளுக்குச் செல்லும் அரசியல் தலைவர்கள் எல்லாருமே இந்த நாட்டுக்கோ அல்லது தங்களுக்கோ பெருமையைத் தேடித் தந்துவிடுகிறார்கள் என்று சொல்லிவிட முடியாது. ஆனால், அமெரிக்காவிலும் ஜப்பானிலும் பயணம் செய்துவிட்டுத் திரும்பியுள்ள தமிழக முதல்வர் திரு. அண்ணாதுரை, வெளிநாடுகளில் இருக்கும்போது தமக்குத் தாமே தனிச் சிறப்புடனும், விழிப்புணர்ச்சியுடனும், தம் கருத்துக்கு ஒத்த முறையிலும் பேசியிருக்கிறார்.

“மத்திய அரசையும் தமக்கு எதிரான காங்கிரசுக் கட்சியையும் கண்டிப்பதற்கு மாறாக, புதுடில்லியைப் பற்றி மிகவும் பெருந்தன்மையுடன் தம் கருத்தினைத் தெரிவித்திருக்கிறார். அத்துடன், பொருளாதார — அரசியல் துறைகளில் மத்திய அரசு எடுத்துவரும் முயற்சிகள் குறித்தும் பெருமையுடன் பேசியிருக்கிறார்.

“வெளிநாடுகளிலிருக்கும்போது அவர், இந்தியாவின் சார்பில் பேசியிருக்கிறார். ஆடம்பரமாகத் தம் ‘சுயபுராண’த்தைப் பாடிக்கொண்டும், எதிரிகளை வசைமாரி பொழிந்துகொண்டும் சுற்றுப்பயணம் செய்வதுதான் நம்முடைய சில அரசியல் தலைவர்களின் பணியாக இருந்தது.

“அண்ணாதுரை வெளிநாடுகளில் சிறப்பான இராசதந்திர முறைப்படி நடந்துகொண்டிருப்பது மிகவும் நல்ல பலனைத் தரத்தக்கதாக இருக்கிறது. அண்மைக் காலம் வரையில் தனி நாடு கொள்கையைக் கொண்டிருந்த ஒரு கட்சியின் தலைவரான திரு. அண்ணாதுரை, அமெரிக்காவிலும், ஜப்பானிலும் வெளியிட்ட கருத்துக்கள், இங்கு மேசையைத் தட்டிப் பேசும் குறுகிய எண்ணம் படைத்தவர்களும், தம்மை, ‘ஒரு தேச பக்தன்’ என்று சொல்லிக்கொள்பவர்களும் பின்பற்றத்தக்க முறையின் ஒரு முன்னுதாரணமாக அமைந்திருந்தது.

“தற்போது நாட்டில் நிலவும் பிரிவினைப் போக்கு, மத — மொழி வெறி பிடித்தவர்களின் செயல்களால் ஏற்பட்டவையே!

“‘தேச பக்தி’ என்பது, தனிப்பட்டவரின் ஏகபோகச் சொத்தல்ல; அண்ணாதுரை, ‘உண்மையான தேச பக்தி என்பதன் பொருள் என்ன’ என்பதை விளக்கியிருக்கிறார்!”

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

17--5--68

ஓலையூர்

எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் மாலை 5-30 மணிக்கு; தலைவர்: க. ந. இராமச்சந்திரன் எம்.எல்.ஏ.; பேசுவோர்: புலவர் பொன்னிவளவன், கா. கு. கணேசன், மற்றும் பலர்.

18--5--68

கடயக்குடி

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு; தலைவர்: மு. இயலரசன்; பேசுவோர்: கே. வி. சுப்பையா எம்.எல்.ஏ., சேக்தாவூத் எம்.சி., முத்துவீரப்பன், மணிமொழி (கண்ணம்மா—தங்கராசு கலை நிகழ்ச்சி நடைபெறும்)

மதுரை

தியாகி சின்னச்சாமி நினைவு மன்ற மூன்றுவது ஆண்டு விழா; மாலை 7-மணிக்கு, டவுன் ஹால் ரோடு பச்சை நாச்சியம்மன் கோயில் தெருவில்; தலைவர்: பட்டுராசன் பி.ஏ., பி.எஸ்சி.; கா. காளிமுத்து, எழில் விழியன், சி. கோவிந்தராசன் எம்.எல்.ஏ., சி. நடராசன்.

மதுரை

பனகல் படிப்பகம்—எம் ஜி. ஆர். மன்றம் ஆகியவை சார்பில் மாலை 7-மணிக்கு மதிச்சிவம் பாரதிதாசன் திடலில் (சப்பானி கோயில் தெருவில்); தலைவர்: பொ. இராமச்சந்திரன்; பேசுவோர்: திருவை. ஆ. அண்ணாமலை, கே. எஸ். சந்தானம் எம்.சி. எம். மதுரைவீரன் எம்.சி.

அமைச்சர் சத்தியவாணிமுத்து வெளிநாடு பயணம்

மொரீஷியஸ் தீவுக்குச் செல்கிறார்

சென்னை, மே 15—

தமிழகச் செய்தித்துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து மொரீஷியஸ் தீவுக்குச் செல்கிறார்.

ஆப்பிரிக்காவுக்குக் கிழக்கே உள்ள மடகாஸ்கர் தீவிலிருந்து 550 மைல் தொலைவில் இருக்கும் இந்தத் தீவில் 7½ இலட்சம் பேர் வாழ்கிறார்கள். இங்கு ஆயிரக்கணக்கான தமிழர்களும் வசிக்கிறார்கள். அவர்கள் அங்கு குடியேறியவிதம், அவர்களுடைய வாழ்க்கை நிலை முதலியவைகளை நேரில் கண்டறியத் தமிழ்நாட்டு அமைச்சர் ஒருவரை அங்கு அனுப்பிவைக்குமாறு, தலைமையமைச்சர் திருமதி இந்திராகாந்தி, தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்களைக் கேட்டுக்கொண்டிருந்தார்; அதற்கேற்ப திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் அங்கு செல்கிறார்.

திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள், ஜூன் திங்கள் 3-ஆம் நாள் சென்னையிலிருந்து விமானம்மூலம் பம்பாய்க்குப் புறப்பட்டுச் சென்று, அங்கு ஆளுநர் டாக்டர் பி. வி. செரியன் அவர்களின் விருந்தாளியாகத் தங்குவார். மறுநாள் பிற்பகல் 1-45 மணிக்கு பம்பாயிலிருந்து விமானம் மூலம் புறப்பட்டு மாலை 5-15 மணிக்கு மொரிஷியஸ் தீவை அடைவார். அங்கு சுமார் 2 வார காலம் தங்கி, தமிழர் தலைவர்களைச் சந்திப்பார்; தமிழ் மக்களின் நிலைமைகளை நேரில் கண்டறிவார்.

மொரிஷியஸ் தீவுக்கருகில் உள்ள ரியூனியன் தீவுக்கும் செல்வார். திரும்பும் வழியில் கென்யா நாட்டின் தலைநகரான நைரோபிக்குச் செல்வார்.

ஜூன் 18-ஆம் நாள் விமானம் மூலம் பம்பாய் வந்து மறுநாள் சென்னை வந்தடைவார்.

கழகத்தேர்தல்கள் ஒத்திவைப்பு

★

நகர -- பெருநகரக் கிளைகள்; சென்னை வட்டக் கிளைகள் தேர்தல் நாள் ஒத்திவைப்பு

மே 18, 19 ஆகிய நாட்களில் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்த நகர—பெருநகரக் கிளைகளின் தேர்தல்கள்,

ஜூன் 8, 9 (சனி, ஞாயிறு)

ஆகிய நாட்களுக்கு ஒத்திவைக்கப்படுகின்றன.

அதேபோல்,

மே 18, 19 ஆகிய நாட்களில் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்த சென்னை வட்டக் கிளைகளின் (டிவிஷன் கிளைகள்) தேர்தல்கள்

ஜூன் 1, 2 (சனி, ஞாயிறு)

ஆகிய நாட்களுக்கு ஒத்திவைக்கப்படுகின்றன.

அடுத்து வட்ட—மாவட்ட தலைமைக் கழகத் தேர்தல்களுக்கான நாட்கள் அவ்வப்போது அறிவிக்கப்படும்.

‘அறிவகம்’, சென்னை-13
10—5—68

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

கார்ல் மார்க்ஸ் பிறந்த நாள் விழா

கார்ல் மார்க்ஸ் 150-வது பிறந்த நாள் விழா 17—5—68 மாலை 6-மணிக்கு சென்னை கோகலே மண்டபத்தில் நடைபெறும்; கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் கருத்தரங்கைத் துவக்கிவைப்பார்: திரு. டி பாண்டியன் எம்.ஏ.பி.எல்,, தலைமை வகிப்பார்; மேயர் டாக்டர் அபிபுல்லாபேக், இரஷ்யத் தூதுவரக அதிகாரி திரு. ஜி. ஐ சாவரின், கிழக்கு ஜெர்மனியைச் சேர்ந்த திரு. ஏக், திரு. ம. பொ. சிவஞானம், திரு ஏ. என். சட்டநாதன், திரு. வி. கே. கிருஷ்ணமூர்த்தி, திரு. ஏ. சீனிவாசன், திரு. ஏ. கோவிந்தசாமி ஆகியோர் பேசுவர்.

கல்லூரி ஆசிரியர்கட்குப் புதிய ஊதியவிகிதம்

ஏப். 1-ம் நாள் முதல் செயல்படுத்த முடிவு

திருச்சி, மே 16—

பல்கலைக் கழக மானியக் குழு சிபாரிசு செய்துள்ள ஊதிய விகிதங்களை பி.யு.சி. வகுப்பு மட்டும் நடத்தும் கல்லூரிகளுக்கும் செயல்படுத்தத் தமிழக அரசு முன்வந்துள்ளது.

அரசுக் கல்லூரி, தனியார் கல்லூரி இரண்டுக்கும் இது பொருந்தும்.

1966 ஏப்ரல் 1-ந் தேதி முதல் முன் தேதியிட்டு இது செயல்படுத்தப்படும்; இதற்கான உத்தரவை அரசு பிறப்பித்திருக்கிறது.

கல்லூரிகளிலுள்ள உடற்பயிற்சி ஆசிரியர்கள் (பிசிகல் டைரக்டர்கள்), நூலக அதிகாரிகள் (லைப்ரேரியன்) முதலியோருக்கும் இந்த ஊதிய விகிதம் செயல்படுத்தப்படும்.

‘தமிழகக் கல்வி சர்வீசை’யும், ‘தமிழகக் கல்வி சபார்டினேட் சர்வீசை’யும் சேர்ந்த ஆசிரியர்கள்—அதிகாரிகள் ஆகியோர், தொழில் கல்லூரிகள்—மாநிலக் கல்விக் கழகம் போன்ற நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டிருந்தால் அவர்களுக்கும் இந்த ஊதிய விகிதம் கிடைக்கும்.

1966 ஏப்ரல் 1-ந் தேதிக்குப் பிறகு ஏற்படுத்தப்படும் பதவிகளுக்கு நியமிக்கப்படும் ஆசிரியர்களுக்கும் இது கிடைக்கும்.

இந்தப் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கும் ஏப்ரல் 1-ந் தேதியிலிருந்து முன் தேதியிட்டு செயல்படுத்தப்படும்.

குடும்பக் கட்டுப்பாட்டுப் பயிற்சி நிலையங்கள்

மேலும் அதிகரிக்கத் திட்டம்

புதுடில்லி, மே 16—

1966—67-ல் 28 ஆக இருந்த குடும்பக் கட்டுப்பாடு பயிற்சி நிலையங்களின் எண்ணிக்கை 41 ஆக உயர்ந்திருக்கிறது.

குடும்பக் கட்டுப்பாடு அலுவல்களில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கென இந்த நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

1968—69-ம் ஆண்டில் மேலும் நான்கு நிலையங்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

மருத்துவக் கல்லூரிகளில் பட்டம் பெற்ற பிறகு குறிப்பிட்ட காலத்திற்கு குடும்பக் கட்டுப்பாடு அலுவலில் ஈடுபடும் 1,500 மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கு இந்தக் குடும்ப நலப் பயிற்சித் திட்டத்தின்கீழ் உபகாரச் சம்பளம் வழங்கப்படும் என்று தெரிகிறது.

நீல நாராயணன் பாராட்டு விழா மலர்

தோழர்கட்கு வேண்டுகோள்

சென்னை மாவட்ட தி. மு க. செயலாளர் திரு. நீல நாராயணன் அவர்களின் பாராட்டு விழாக் குழுச் சார்பில் மலர் ஒன்றை வெளியிட ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

மலரில் மாண்புமிகு அமைச்சர்களும், கழகத் தலைவர்களும் எழுதுகிறார்கள்.

தோழர் நீல நாராயணனுடன் நெருங்கிப் பழகியவர்களின் கருத்துக்களையும் மலரில் சேர்க்க விரும்புகின்றோம்; எனவே, அவரைப்பற்றிய கருத்துக்களை, கீழ்க்காணும் முகவரிக்கு ஒரு பக்கத்திற்குமேல் போகாமல் ஜூன் 10-ம் நாளுக்குள் எழுதி அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

முகவரி:—மு. வரதராசன், செயலாளர், 325, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, சென்னை-5.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.